THE HON. SRI R. VENKATARAMAN : சர்க்காருக்கு மெஜாரிட்டி ஷேர் இருக்கும் இடத்தில் சர்க்கார் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கும். சர்க்கார் குறைவான பங்கு எடுத்திருக்கக்கூடிய இடங்களில் தனியார் நிர்வாகப் பொறுப்பில் இருக்கிறது. அதிலே சர்க்காருக்கு ஒரு டைரக்டர் உண்டு.

SRI A. GOVINDASAMY : ஸார், நல்ல வருமானம் வரக்கூடிய த்ரங்கத்ரா கெமிகல் போன்ற ஸ்தாபனங்களில் சர்க்கார் குறைவான பங்கு எடுத்துக்கொள்ளக் காரணம் என்ன? அதிக பங்கு கொள்ள அரசாங்கம் முயற்சிக்குமா?

THE HON. SRI R. VENKATARAMAN : ஒரு சமயத்தில் சர்க்கார் 10 லட்சம் ரூபாய் போட்டது தப்பு என்று ஒரு அபிப்பிராயம் சட்ட சபையில் கூறப்பட்டது. இதில் பல விதமான அபிப்பிராயங்கள் இருக்க முடியும் என்பதை அது காட்டுகிறது. த்ரங்கத்ரா கெமிகல்ஸில் 10 லட்சம் ரூபாய் போடும்போது சர்க்கார் ஏதாவது நாமினல் பங்கு எடுத்துக் கொண்டால்தான் பொது மக்கள் ஊக்கமாய்ப் பங்கு எடுப்பார்கள் என்று சொன்ன காரணத்தினால் 10 லட்சம் ரூபாய் ஷேர் எடுத்துக்கொண்டோம். முழுவதையுமே நடத்துவது என்றால் அது பெரிய ஸ்கீம். அத்தகைய காரியம் முடியுமா என்று யோசிக்க வேண்டும். தனியார் துறையில் முன் வந்ததால் சர்க்கார் வேண்டிய உதவியை அளிக்கும்.

SRI A. A. RASHEED : In view of the establishment of the Industrial Investment Corporation, have the Government stopped giving loans to private industries, Sir?

THE HON. SRI R. VENKATARAMAN : There are two schemes. One is the loan scheme to small-scale industries to the extent of Rs. 25 lakhs per annum distributed under the Madras State Aid to Industries Act. The other is the Madras Industrial Investment Corporation which functions as a bank and takes shares as well as market loans.

Uranium

* 346 Q.—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Industries be pleased to state the results of exploratory drilling for Uranium ores?

THE HON. SRI R. VENKATARAMAN : Exploratory drilling has recently been started in the Kullampatti area of the Salem district. The quantity and quality of the ore from the above deposit can be assessed only after a sufficient amount of drilling followed by development work has been carried out. The work is in progress.

14th March 1960]

SRI K. SATTANATHA KARAYALAR : சேலம் மாவட்டத்தைத் தவிர மற்ற மாவட்டங்களிலும் இந்தப் பரிசீலனை செய்யப்பட வருக்கிறதா ? 9-00 a.m.

THE HON. SRI R. VENKATARAMAN : அடாமிக் எனர்ஜி கமிஷன் எந்த எந்த இடங்களில் இந்த அணுசக்திப் பொருள்கள் கிடைக்கும் என்று பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது. ஆனல் சேலம் ஜில்லாவில் இந்தப் பகுதியில்தான் ரேடியோ ஆக்டிவிடி இருக்கிறது என்பது கண்டுபிடிக்கப்பட்டு, அங்கே மேற்கொண்டு ட்ரில்லிங் அதாவது தோண்டுதல், நடந்துகொண்டிருக்கிறது.

Preservation of Neera

* 347 Q.—SRI A. VEDARATHNAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) சென்னை பல்கலை கழகத்தின் பயோ-கெமிஸ்டிரி (Boi-chemistry)இலாகா பதனீர் விரைவாக கள்ளாக மாறிவிடாமலிருக்க பாதுகாப்பு முறை ஏதேனும் கண்டுபிடித்துள்ளார்களா ?

(ஆ) திருநெல்வேலி ஜில்லா உடன்குடியில் இவ்வாராய்ச்சி நடைபெறுகிறதா ? அதன் முடிவென்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Dr. P. S. Sarma, Professor of Bio-Chemistry, University of Madras has reported to Government that he has evolved a new process of preservation of neera, with "Paludrine". The question whether neera treated according to the new process can be preserved without fermentation is under examination in consultation with the Director of Medical Services.

(b) The research referred to in clause (a) above was conducted by Dr. Sarma at Udangudi in Tirunelveli district during 1958–59. No other research is being done at Udangudi at present.

SRI A. GOVINDASAMY : நீராவை இவ்வாறு ப்ரிஸர்வ் பண்ணினல் அது மதுவின் தன்மையை அடைகிறது. அது மது சக்தியை அடைகிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அப்படியானல், மதுவிலக்கை அமல் நடத்தும் இந்த அரசாங்கம் இதில் கவனம் செலுத்துவது சரியா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நீரா புளிக்காமல் இருந்தால், அதில் மதுவைப் போன்ற கெடுதலான அம்சம் ஒன்றும் இல்லை. அது நல்ல பானம். இதை சோடாவைப் போல பாட்டில் செய்து கொடுக்க வேண்டும் என்பது என் ஆசை; அதுபற்றி இப்போது ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகிறது.